சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි

19.10.2020 திங்கட்கிழமை




### புதினம் தெரியுமோ?

முரளிதரனின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட '800' படத்தில் இருந்து விலகுவதாக முடிவெடுத்துள்ளாராம் விஜய் சேதுபதி. இந்தப் படத்தில் நடிப்பதற்கு விஜய் சேதுபதி ஒப்பந்தம் செய்யப்பட்டது முதல் தமிழகத்திலும் ஈழத்திலும் அவருக்கு எதிராகக் கடும் விமர்சனங்கள், அழுத்தங்கள் முன்வைக்கப்பட்டன. பாடலாசிரியர் தாமரை, இயக்குநர் பாரதிராஜா 2

## தெஹிவளையில் வைத்து

## அதிகாலையில்

# ரிஷாத் கைது!



### சி.ஐ.டி. அதிரடி

கொழும்பு, ஒக்டோபர் 19

பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தேடப்பட்டு வந்த முன்னாள் அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் இன்று அதிகாலை கைதுசெய்யப்பட்டுள்ளார். 2

## ரிஷாத்துக்கு அடைக்கலம் வழங்கிய வைத்தியரும் மனைவியும் சிக்கினர்!

கொழும்பு, ஒக். 19

தெஹிவளை, எபனேசர் மாவத்தையிலுள்ள மாடிக் குடியிருப்பொன்றில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் இன்று கைதுசெய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் தங்கியிருந்த வீட்டின் உரிமையாளரும் கைதுசெய்யப்பட்டுள்ளார். 2

## ரிஷாத்துக்கு உதவிய ஏழு பேர் கைது

கொழும்பு, ஒக். 19

சி.ஐ.டியினரால் கைது செய்யப்படுவதைத் தவிர்க்க நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு 2

## பரபரப்புக்கு மத்தியில் நாளை கூடுகின்றது நாடாளுமன்றம்!

- 23ஆம் திகதி இரவு 20 மீது வாக்கெடுப்பு
- 5 கட்சிகள் எதிர்ப்பு 5 கட்சிகள் ஆதரவு
- இரு கட்சிகள் வாக்கெடுப்பில் பங்கேற்காது

கொழும்பு, ஒக். 19

நாடாளுமன்றம் நாளை முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது. சபாநாயகர் அறிவிப்புவேளையின்போது, அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பான உயர்நீதிமன்றத்தின் சட்டவியாக்கியானத்தை சபாநாயகர் சபைக்கு அறிவிப்பார். அதன்பின்னர் சபையின் நாளாந்த நடவடிக்கைகள் ஆரம்பாகும். ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான 3 ஒழுங்கு 2

## துப்பாக்கிச் சூடு: இருவர் காயம்

கொழும்பு,ஒக்.19

காலி எல்பிட்டியப் பிரதேசத்தில் இன்று காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில், 2

## 28 தமிழ் எம்.பிக்களில் 20 பேர் '20'க்கு போர்க்கொடி

கொழும்பு, ஒக். 19

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 28 தமிழ் எம்.பிக்களில் 20 பேர் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு எதிராகவும், 8 பேர் ஆதரவாகவும் வாக்களிக்கவுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகிய கட்சிகளின் உறுப்பினர்களும், 2

## வாள்வெட்டு சந்தேகநபர் கச்சாயில் கைது

சாவகச்சேரி, ஒக். 19

சாவகச்சேரி கச்சாய் பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து வாள்வெட்டுச் சம்பவங்களுடன் 2

## பேருந்து மோதியதில் மாணவிக்கு படுகாயம்

பரீட்சை எழுதிவிட்டு திரும்புகையில் துயரம்

கொடிகாமம், ஒக். 20

க.பொ.த உயர்தர கணித பாடத்துக்குத் தோற்றிவிட்டு வீட்டுக்குச் செல்வதற்காக 2

## ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 சிறுவர்கள் சடலமாக மீட்பு

கொழும்பு, ஒக். 19

கலேவல ரன்வெதியாவ பகுதியில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று சிறுவர்கள் கிணற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டனர். இன்று காலை குறித்த மூன்று சிறுவர்களையும் 2

## ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையை கண்டித்து முல்லைத்தீவில் கவனவீர்ப்பு!

முல்லைத்தீவு, ஒக். 19

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் நினைவுதினமான 2



## ஊடகர் நிமலராஜன் நினைவுநாள் இன்று



2A

# ரிஷாத்....



தெஹிவளை, எபனேசர் மாவத்தையிலுள்ள மாடிக் குடியி ருப்பொன்றில் மறைந்திருந்தபோது அவர் கைதாகியுள்ளார் என்று பொலிஸ் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
கடந்த நல்லாட்சி அரசில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சராகப் பதவி வகித்த ரிஷாத் பதியுதீன், 2019இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது அரச பணத்தை முறையற்ற வகையில் பயன்படுத்தி இ.போ.ச பஸ்கள் மூலம் புத்தளத்தில் இருக்கும் வாக்காளர்களை மன்னாருக்கு அழைத்துச் சென்றுள்ளார் என்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாகக் கொண்டு அவரைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபரினால் கடந்த 13ஆம் திகதி பதில் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. இந்த உத்தரவுக்கமைய கடந்த 6 நாள்களாக ரிஷாத் பதியுதீனைத் தேடிவந்த குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் இன்று அதிகாலை அவர் இருக்கும் இடத்தைக் கண்டுபிடித்துக் கைதுசெய்துள்ளனர்.
ஏற்கனவே முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் கணக்காளர் மற்றும் ரிஷாத்தின் மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் ஆகியோர் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

# 20 பேர்...

பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தியின் தமிழ் எம்.பி வடிவேல் சுரேஷ்ும் எதிராக வாக்களிக்கவுள்ளனர்.
இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஈ.பி.டி.பி., தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகிய கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களிக்கவுள்ளனர். சுதந்திரக்கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினரான அங்கஜன், மொட்டு கட்சியில் உள்ள வியாழேந்திரன், தேசியப்பட்டியல் எம்.பி., சுரேன் ராகவன் ஆகியோரும் 20க்குச் சார்பாக வாக்களிக்கவுள்ளனர்.
9ஆவது நாடாளுமன்றத்தில் பொதுத்தேர்தலில் மக்களின் அங்கீகாரத்துடன் 25 உறுப்பினர்கள் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகினர், தேசியப்பட்டியல் ஊடாகவும் மூவருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
அரசியல் கட்சிகளில் அங்கம் வகிக்கும் தமிழ் எம்.பிக்களின் எண்ணிக்கை வருமாறு,

| | |
|---|---|
| தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு | 10 |
| தமிழ் முற்போக்கு கூட்டணி | 6 |
| தமிழ் தேசிய மக்கள் முன்னணி | 2 |
| ஈ.பி.டி.பி. | 2 |
| தமிழ் மக்கள் தேசிய முன்னணி | 1 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி | 1 |
| சுதந்திரக்கட்சி | 1 |
| ஐக்கிய மக்கள் சக்தி | 1 |
| பொதுஜன பெரமுன | 4 |

அதேவேளை, 8ஆவது நாடாளுமன்றத்திலும் 28 தமிழ் எம்.பிக்கள் அங்கம் வகித்தனர், அவர்கள் அனைவரும் 19ஆவது திருத்தச்சட்டமூலத்துக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-44)

# பரபரப்புக்கு மத்தியில்...

விதிகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும்.
மறுநாள் 21ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு 20ஆவது திருத்தம் மீதான விவாதம் ஆரம்பாகும். 21, 22ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணி முதல் இரவு 7.30 மணிவரை விவாதத்தை முன்னெடுக்கப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
22ஆம் திகதி இரவு 7.30 மணிக்கு விவாதம் முடிவடைந்ததும் குழு நிலை ஆரம்பிக்கப்படும். அதன் பின்னர் திருத்தங்கள் முன்வைக் கப்பட்டு 20ஆவது திருத்தம் வாக்கெடுப்புக்கு விடப்படும், சிலவேளை '20' நிறைவேறு வதற்கு இரவு 10 மணிகூட தாண்டலாம்.
அதேவேளை, அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தில் பொதுவாக்கெடுப்புக்கு வழிகோலும் சரத்துகள் இருந்தால் அவற்றை நீக்கிவிட்டு மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றுவதே அரசின் எதிர்பார்ப்பாக உள்ளது.
நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளில் ஐக்கிய மக்கள் சக்தி, இலங்கை தமிழ் அரசுக்கட்சி, தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி ஆகியன '20'ஐ எதிர்ப்பதற்கு தீர்மானித்து எதிராக வாக்களிக்கவுள்ளன. அத்துடன், பொதுஜன பெரமுன, சுதந்திரக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, தேசிய காங்கிரஸ் மற்றும் ஈ.பி.டி.பி. ஆகியன ஆதரவாக வாக்களிக்கவுள்ளன. ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் எமது மக்கள் சக்தி ஆகிய கட்சிகள் இன்னும் எம்.பிக்களை நியமிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-44)

## ரிஷாத்துக்கு அடைக்கலம் வழங்கிய...

வைத்தியரான குறித்த நபர் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவருடன் சேர்த்து அவரின் மனைவியும் கைதுசெய்யப்பட்டுள்ளார். இருவரிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ம-22)

# வாள்வெட்டு...

தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து கைக்குண்டு ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,
சாவகச்சேரி கச்சாய் பகுதியில் வாள் வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஒருவர் பதுங்கியிருப்பதாக பொலிஸாருக்கு நேற்று இரகசியத் தகவல் கிடைத்தது. இதையடுத்து அடையாளம் காணப்பட்ட வீட்டைச் சுற்றி வளைத்து சந்தேக நபர்கள் தேடுதலில் ஈடுபட்டனர். இதன்போதே 31 வயதுடைய மேற்படி சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்டவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-20)

# பேருந்து மோதியதில்....

பாடசாலைக்கு முன்னால் உள்ள பாதசாரிக் கடவையை கடந்து செல்லும்போது பேருந்து மோதி மாணவியொருவர் படுகாயமடைந்தார்.
மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரிக்கு முன்பாக இன்று நண்பகல் இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றது. அல்லாரை வடக்கு மீசாலையைச் சேர்ந்த துரைசிங்கம் ருக்சியா (வயது 19) என்ற மாணவியே தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். கொடிகாமம் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ப159,9)

# ஒரே குடும்பத்தை...

காணவில்லை என்று தேடப்பட்ட நிலையில் அவர்கள் கிணற்றுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டமை அந்தப் பகுதியை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. உயிரிழந்த சிறுவர்களுக்கு 7, 12, 15 வயது என்று தெரியவருகின்றது. (ம-இ)

# ஊடகவியலாளர்கள்...

இன்று அவருக்கு அஞ்சலி நிகழ்வுகளை நடத்திய காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், தமது நிகழ்வுகளின் ஒரு பகுதியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் அண்மையில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கவனவீர்ப்பிலும் ஈடுபட்டனர். (ம-19,110)

## புதினம் தெரியுமோ

என்று திரையுலகின் பெரும் ஆளுமை கள்கூட விஜய் சேதுபதி குறித்த படத்தின் ஒப்பந்தத்தில் இருந்து விலகவேண்டும் என்று வலியுறுத்தினர். ஈழத்து இளைஞர்களும் இந்தப் படத்தில் இருந்து சேதுபதி விலக வேண்டும் என்று வலியுறுத்தினர். அத்துடன் நின்று விடாது இலங்கைக் கிரிக்கெட் அணியில் மனித நேயத்தின் இலக்கணமாகத் திகழ்ந்த குமார் சங்கக்காரவை வைத்துப் படம் எடுத்தால் அதில் நடியுங்கள் ஏற்போம் என்று சிலர் வலியுறுத்தினர். எதிர்ப்புக்கள் அதிகரித்த நிலையில் இந்தப் படத்தில் இருந்து விலகும் முடிவை எடுத்துள்ளாராம் விஜய் சேதுபதி. சேதுபதி தானாக விலகும் முடிவெடுத்துவிட்டால் தனது கௌரவத்துக்குப் பாதிப்பு என்று எண்ணிய அந்தப் படத்துடன் தொடர்புடைய திரை மறை ஹீரோ ஒருவர், விஜய் சேதுபதியை விலகுமாறி கோரி கடிதம் அனுப்பியுள்ளாராம். இப்போது தான் கேட்டுத்தான் அவர் விலகினார் என்று கதைவரும் என்பது அந்த திரைமறை நாயகனின் கோரிக்கை. எங்கட பெடியளிட்ட இதெல்லாம் எடுபடுமா!.

– பட்சி

# ரிஷாத்துக்கு....

உதவியதற்காக மருத்துவர் உட்பட 7 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார். நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் சி.ஐ.டி அதிகாரிகளால் இன்று அதிகாலை தெஹிவளையில் உள்ள வீடொன்றில் கைது செய்யப்பட்டார். இந்த நிலையில் அவர் மறைந்திருந்த வீட்டில் வசிக்கும் மருத்துவரும் அவரது துணைவியாரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். மருத்துவரின் மனைவி, முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் நெருங்கிய நண்பர் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
தெஹிவளைக்கு வருவதற்கு முன்னர், ரிஷாட் பதியுதீன் தஞ்சம் கோரிய மற்ற இடங்கள் குறித்த விவரங்களைப் பெற பொலிஸார் சிறப்பு விசாரணையைத் தொடங்கினர். இந்த நிலையில் அவருக்கு அடைக்கலம் கொடுத்த குற்றச்சாட்டில் இதுவரை 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த சந்தேகநபர்கள் இன்று மாலை கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர். (ம-இ)

# துப்பாக்கிச் சூடு:...

இருவர் காயமடைந்துள்ளனர் என்று பொஸார் தெரிவித்துள்ளர்.
மது அருந்திக்கொண்டிருந்த நான்கு நபர்களிடையே ஏற்பட்ட தகராறில் ஒருவர் சுடப்பட்டுள்ளார். அதேவேளை காயமடைந்த நபர் கூர்மையான ஆயுதத்தால் துப்பாக்கிதாரியைத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவத்தில் காயமடைந்த இருவரும் கராப்பிட்டி போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(க)

# ஊடகர் நிமலராஜன்...

யாழ்ப்பாணம், ஒக். 19
யாழில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 20ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டது.



**யாழ்ப்பாணம்**

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் யாழ். ஊடக அமையத்தில் மதியம் நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. நிமலராஜனின் திருவுருவப் படத்திற்கு அவரது சகோதரன் சுடரேற்றினார். அதனைத் தொடர்ந்து யாழ்.மாநகர சபை உறுப்பினர் வ. பார்த்தீபன் மலர்மாலை அணிவித்தார், அதனையடுத்து வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர் ச.சஜீவன் மற்றும் ஊடகவியலாளர்கள் மலரஞ்சலி செலுத்தினர்.




**வவுனியா**

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ம.நிமலராஜனின் 20ஆவது நினைவுதினம் வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தினாலும் இன்று கடைப்பிடிக்கப்பட்டது.
சங்கத்தின் தலைவர் சு.வரதகுமார் தலைமையில் வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்க அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் அன்னாரது திருவுருவப்படத்திற்கு அஞ்சலி சுடரினை சிரேஷ்ட ஊடகவியலாளர் பொ. மாணிக்கவாசகம் ஏற்றி மலர் மாலையும் அணிவித்தார். இதனையடுத்து ஊடகவியலாளர்கள் மெழுகுதிரி ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தியதுடன் நிமலராஜன் தொடர்பான அஞ்சலி உரையினை பொ.மாணிக்கவாசகம் நிகழ்த்தியிருந்ததுடன் நன்றியுரையினை ஊடகவியலாளர் ந.கபிலநாத் நிகழ்த்தினார்.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உறவினர்களாலும் ஊடகவியலாளர் நிமலராஜனின் நினைவுதினம் கடைப்பிடிக்கப்பட்டது. (ம-110,20)

# குடிதண்ணீருக்கு விவரம் சேகரிப்பு

சாவகச்சேரி,ஒக்.20
ஜனாதிபதியின் சௌபாக்கியா தக்ம செயற்றிட்டத்துக்கு அமைவாக கிராம அலுவலர் பிரிவு ரீதியாக மக்களின் குடிதண் ணீர்த் தேவை தொடர்பான விவரங்கள் மாவட்டச் செயலகத்தால் கோரப்பட்டுள்ளன.
நீர் வழங்கல் அமைச்சுடன் தேசிய நீர் வழங்கல் அதிகார சபையால் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.
இதன்படி ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் குடிதண்ணீர் தட்டுப்பாடு காணப்படும் கிராமங்களின் விவரங்களை அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# ஓமந்தை வாள்வெட்டு மூன்றாமவரும் சாவு!

வவுனியா, ஒக். 19
வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மாணிக்கர் வளவுப்பகுதியில் கடந்த 17ஆம்திகதி இடம் பெற்ற வாள் வெட் டில் காயமடைந்த மூன்றாவது நபரும் சிகிச்சை பயனின்றி இன்று உயிரிழந்தார்.
கடந்த 17ஆம் திகதி குறித்த பகுதியில் உள்ள வீடொன்றில் இந்த வாள் வெட்டு இடம்பெற்றது. இரண்டு பேர் சாவடைந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்திருந்த நிலையில் நோயாளர் காவுவண்டிமூலம் அவர் மூலம் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.
கடந்த இரு தினங்களாக அவருக்குத் தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது. எனினும் சிகிச்சை பயனின்றி இன்று அவர் உயிரிழந்தார். (ம-110)



# போக்குவரத்துத் துறையின் அன்றாட வருமானம் குறைவடைந்துள்ளது

*இலங்கை போக்குவரத்துத் துறையின் பிரதிப் பொது முகாமையாளர் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.19
கொரோனாத் தொற்றால் இலங்கை யில் ரயில் மற்றும் பஸ்களில் பயணிப்பவர்க ளின் எண்ணிக்கை வெகுவாக குறைவடைந்துள்ளதால் இலங்கைப் போக்குவரத் துச் துறையின் அன்றாட வருமானம் 80 மில்லியனி லிருந்து 44 மில்லியனாக குறைவடைந்துள்ளது என்று இலங்கைப் போக்குவரத்துத் துறையின் பிரதிப் பொது முகாமையாளர் ஏ.எச்.பண்டுக தெரிவித் தார்.
இந்த மாதம் 7 ஆம் திகதி தொடக்கம் இன்று வரை இலங்கை போக்குவரத்துச் சபைக்கு 210 மில்லியன் நட்டம் ஏற்பட் டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித் தார். இதற்கமைய, ரயில்வே திணைக் களத்தின் அன்றாட வருமானம் 19 மில்லியனிலிருந்து 14 மில்லியனாக குறை வடைந்துள்ளது என்று ரயில்வே பொது முகாமையாளர் டிலந்த பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். பயணிகளின் எண் ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளமையால், தூர இடங்களுக்கான ரயில் சேவைகளை இரத்துச் செய்ய நேர்ந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)

# சிறுவர்கள் சேகரித்த பிளாஸ்ரிக் கழிவுகள்

சாவகச்சேரி,ஒக்.19
தென்மராட்சி சிறுவர்கள் இருவரால் சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக் கழிவுகள், சாவகச்சேரி நகர சபை பிளாஸ்ரிக் மீளுருவாக்கல் நிலையத்தில் இன்று ஒப்படைக்கப்பட்டன. சாவகச்சேரி நகர சபையால், உக்காத கழிவுப் பொருள்களை சேகரித்து மீள சுழற்சி முறையில் மீளுருவாக்கம் செய்யும் நிலையம் அண்மையில் திறக்கப்பட்டது.
அங்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி தரம் 6 மாணவன் ந.அபர்னன், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி தரம் 5 மாணவன் அ.கரிஷ்யதுர்சன் ஆகியோர் இணைந்து கழிவுப்பொருள்களை ஒப்படைத்தனர்.
தமது வீட்டு சுற்றாடலிலும், கிராமத்திலும் சேகரித்த ஒரு தொகுதி பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகளை, நகர சபை பொதுச்சுகாதார பரிசோதகர் பி.தளிர்ராஜிடம் கையளித்தனர். தம்மை போன்று ஏனைய சிறுவர்களும் தமது வீட்டுச் சுற்றாடலில், கிராமத்தில் உள்ள கழிவுகளைச் சேகரித்து இங்கு கையளிக்கலாம் என்று சிறுவர்கள் தெரிவித்தனர்.
இதேவேளை இந்த கழிவு சேகரிப்பு நிலையத்தில் கழிவுகளைக் கையளித்து, அங்கு வழங்கப்படும் கழிவு சேகரிப்பு கூப்பன்களை நிரப்பி ஊக்கத் தொகையைப் பெறமுடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (க-இ)





# உரமானியம் வழங்கலில் சுகாதார விதிமுறை மீறல்

கிளிநொச்சி,ஒக்.20
முகக்கவசம், தனிநபர் இடைவெளி என்பன மறந்து விவசாயிகள் உரமானிம் பெறுவதற்கு முண்டியடித்தனர். கிளிநொச்சி பொக்கணை கமநல அபிவிருத்தி நிலையத்தில் இதனை அவதானிக்க முடிந்தது.
அங்கு பணிபுரியும் அரச உத்தியோகத்தர்களும் சுகாதார நடைமுறைகளை மறந்து மக்களை ஒன்று திரட்டியிருந்தனர்.
தற்போது கொரோனா சமூகத் தொற்றாக மாறிவரும் நிலையில், விவசாயிகள் சுகாதார நடைமுறைகளை மீறியமை மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (க-113)



# திருமலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

திருகோணமலை, ஒக்.19

திருகோணமலை அலஸ்தோட்டம் கடற்கரை யோரத்தில் ஆண் ஒருவரின் சடலம் இன்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் பள் ளத்தோட்டம் பகுதியில் தனிமையாக வாழ்ந்து வந்த 46 வயதுடையவர் என்று பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவரது சடலம் தற்போது பிரேத பரிசோத னைக்காக திருகோணமலை பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளது என்றும், இது தொடர்பான மேலதிக விசார ணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் உப்புவெளிப் பொலி ஸார் தெரிவித்தனர். (ற-இ)





மானிப்பாய் பரிஷ் லியோ கழகம் , தாய் கழகமாகிய மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்துடன் இணைந்து, வலி. தென் மேற்கு பிரதேச சபை பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் கொரோனாவுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (க-இ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் கைதான இருவர் விடுவிப்பு

கொழும்பு,ஒக்.19

உயிர்த்த ஞாயிறு தொடர் தற்கொலைத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரானுடன் தொடர்பு வைத்திருந்தனர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இருவர் வழக்கிலிருந்து விடு விக்கப் பட்டுள்ளனர்.

காலி அத்தக்வா பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் மௌலவி எம்.ஜே.எம்.அதாவுல்லா மற்றும் பொருளாளர் எம்.எஸ்.எம்.ரிசாத் ஆகியோர் சகலகுற்றச்சாட்டுகளில் இருந்தும் முழுமையாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான வழக்கு விசா ரணை காலி நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போது சட்டமா அதிபரின் நிலைப்பாடு மற்றும் அது தொடர் பிலான ஆலோசனை அடங்கிய அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப் பட்டது. இதனை ஆராய்ந்த காலி நீதவான் ஹர்ஷன கெக்குனுவெல்ல சந்தேகநபர்களை, அவர்களுக்கு எதிராக சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுதலை செய்வதாக அறிவித்தார். ஏப்ரல் 21 இல் நடைபெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலைத் தொடர்ந்து பள்ளிவா சல் தலைவரும் , பொருளாரும் 2019 ஏப்ரல் 27 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

சஹ்ரானுடன் தொடர்பு வைத்தி ருந்தனர். பள்ளிவாசலை நிர்மா ணிக்க சஹ்ரானுடனான தொடர்பினூ டாக பணம் கிடைத்தமை. இன வாதத்தைத் தூண்டும் விரிவுரைகள் நடத்தப்பட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் இவர்களுக்கு எதிராக க் குற்றஞ்சாட்டப்பட்டது.

பள்ளிவாசலில் இருந்த 800 கும் அதிகமாக இறுவட்டுகள் பொலி ஸாரால் கைப்பற்றப்பட்டன. தொடர்ந்து தடுத்து வைக்கப்பட் டிருந்த சந்தேக நபர்கள் ஆறுமாதங்க ளின் பின்னர் 2019 ஒக்ரோபர் மாதம் பிணையில் விடு விக்கப் பட்டனர்.

தொடர்ந்து வழக்கு விசாரணை முன்னெடுக்கப்பட்ட தோடு, இறுவட்டுகளும் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டன. இந்த நிலை யில் இறுதியாக கடந்த மாதம் வழக்கு விசாரணைக்கு எடுக்கப் பட்டு 2021 மார்ச் 15ஆம் திகதிக்கு வழக்கு பிற்போடப்பட்டது. இந்த நிலையிலே சட்டமா அதிபர் திணைக்கள அறிக்கை காலி பொலி ஸூக்கும், நீதிமன்றப் பதிவாளருக் கும் அனுப்பப்பட்டது. இதனைய டுத்து பொலிஸார் இடையீட்டு மனுவொன்றை தாக்கல் செய்த நிலையில், வழக்கு கடந்த வெள்ளி யன்று மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இருவருக்கும் எதிரான குற்றச்சாட்டுகளுக்கு எந்த ஆதாரமும் கிடையாது எனவும், இறுவெட்டுகளில் சந்தேகத்துக்கு இடமான விரிவுரைகள் கிடையாது எனவும் சட்டமா அதிபர் திணைக்க ளம் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் இருவரும் சகல குற்றச்சாட்டுகளில் இருந்தும் முழுமையாக விடுவிக்கப்பட்டனர். வழக்கும் நிறைவுக்கு வந்தது.(க-இ)

## சட்டவிரோதமாக 35 கட்டடங்கள்

கொழும்பு,ஒக்.19

மொரட்டுவவில் உள்ள பொல்கொட ஏரியைச் சுற்றி, 35 க்கும் மேற்பட்ட சட்டவிரோதக் கட்டுமானங்கள் அடையாளம் காணப் பட்டுள்ளன என்று சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

பொல்கட ஏரியைச் சுற்றி அமைக்கப்பட் டுள்ள 37 கட்டிட நிர்மாணத்துக்கு, சுற்றாடல் அமைச்சின் ஒப்புதல் பெறவில்லை என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த சட்ட விரோதக் கட்டடங்களின் உரிமை யாளர்கள் மீது நடவ டிக்கை எடுப்படும் என்றும் அவர் தெரி வித்துள்ளார்.(க-இ)



# பட்டாரக வாகனம் இன்று விபத்து

கிளிநொச்சி, ஒக்.19

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத் துக்கு அருகில் பட்டா ரக வாகனமொன்று இன்று அதிகாலை விபத்துக்குள்ளாகி யுள் ளது. இந்த வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அரு கிலி ருந்த மதகுகட்டை உடைத்து விபத்துக் குள்ளானது. கெக்கராவ பகுதியிலிருந்து அறுநூறு இறைச்சிக் கோழிகளை ஏற்றிக் கொண்டு, யாழ்ப்பாணம் நோக்கி பய ணித்த நிலையிலேயே இந்த வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.

வாகனத்தைச் செலுத்தி வந்த சாரதியின் தூக்கக்கலக்கமே இந்த விபத்துக்கான காரணம் என்று தெரியவருகின்றது. இது தொடர்பில் கிளிநொச்சி போக்குவரத்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி1)

## சீனப்பிரஜைகள் ஐவர் கைது



கொழும்பு,ஒக்.19

கொள்ளுப்பிட்டி யில் அமைந்துள்ள அடுக்குமாடிக் குடி யிருப்பு வளாகத் தில், சீனப்பிரஜை கள் ஐவர் இன்று கைதுசெய்யப்பட் டுள்ளனர்.

சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட் டனர் என்று பொலி ஸார் தெரிவித் துள்ளனர்.

கைதுசெய்யப்பட் டவர்களை, நீதி மன்றில் முற்ப டுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. (க-இ)

## குடிவரவு திணைக்களம் மீண்டும் திறப்பு

கொழும்பு,ஒக்.19

குடிவரவு குடியகல்வு திணைக்க ளத்தின் தலைமையகம் மீண்டும் பொதுமக்கள் பயன்பாட்டுக்கு இன்று திறக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று பரவலை அடுத்து, அண்மையில் தற்காலிக மாக அலுவலகம் மூடப்பட்டது. இந்த நிலையில், முற்கூட்டியே தொலைபேசி அழைப்பு மூலம் நேர மொன்றை ஒதுக்கி, அங்கு வரு மாறு திணைக்களத்தால் அறிக்கை வெளியிடப்பட்டது. அத்துடன், சுகாதார அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-இ)

# எட்டு வீடுகளில் மோட்டர்கள் களவு

யாழ்ப்பாணம், ஒக்.19

யாழ்.கொக்குவில் கிழக்கு பகுதியில் கடந்த ஒரு மாதத்துக்குள் 8 வீடுகளில் தண்ணீர் இறைக்கும் மின்சார மோட்டர்கள் திருட்டுப் போயுள்ளன என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொக்குவில் சபாவதி ஒழுங்கை, பழைய தபால் கந்தோர் ஒழுங்கை, அச்சுக்கூட ஒழுங்கை, தலையாளி போன்ற பகுதிகளிலுள்ள வீடுகளிலேயே இந்தத் திருட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள் ளன. திருட்டு சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் அந்த இடங்களிலே இருக்கின்றனர் என்றும் இரவு நேரங்களில் நடமாடுவது சி.சி.ரி.வி கமெராவில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரி விக்கின்றனர்.

வீடுகளில் இறங்கும் திருடர்கள் கைக்கு அகப்படும் இலத்திரனியல் பொருள்கள் உள்பட வாழைக்குலை, அம்மி என்று ஒன்றையும் விட்டு வைப்பதில்லை என்று மக்கள் மேலும் தெரிவிக்கின்ற னர். (ற-20)

# ஒன்றுகூடலை தவிர்க்கவும்

## சுகாதாரப்பிரிவு கோரிக்கை

கொழும்பு,ஒக்.19

தற்போது ஏற்பட்டிருக்கும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, தேவையற்ற ஒன்றுகூடலைத் தவிர்த்துக்கொள்ளுமாறு பொதுமக்களிடம் சுகாதாரப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு அத்தியவசிய சேவைகளுக்கு மாத்திரம் செல்லுமாறும் சுகாதாரத் துறையினர், பொதுமக்களிடம் கேட்டுள்ளனர்.

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் பரவி வருவதால், நபர்கள் ஒன்றுகூடும் இடங்களுக்குச் செல்வதை முடிந்த வரையில் குறைத்துக் கொள்ளவும் என்று சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அரச நிறுவனங்களில் அத்தியாவசிய சேவைகளை மாத்திரம் வழங்கி, மக்கள் ஒன்றுக்கூடுவதைத் தவிர்க்குமாறு அரச சேவைகள், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

மறு அறிவித்தல் விடுக்கும் வரை அரச நிறுவனங்களில் பொது மக்கள் தினத்தை நடத்த வேண்டாம் எனவும் அவர் அறிவித்துள்ளார்.(க-இ)

# உயர்தர மாணவர்களுக்கு பொலிஸாரின் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.19

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சேர்ந்த உயர்தர மாணவர்களுக்கு, தனிமைப்படுத்தல் மற்றும் ஊரடங்குச் சட்டம் பாதிப்பை ஏற்படுத்தாது. எனவே மாணவர்கள் வீண் குழப்பமடைய வேண்டாம் என்று பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண அறிவுறுத்தியுள்ளார். மாணவர்கள் சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப பரீட்சைகளில் கலந்து கொள்ள முடியும்.

முகக்கவசம் அணிதல் மற்றும் தனிநபர் இடைவெளியைக் கடைபிடித்தல் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (க-இ)

# பல்கலைக்கழக பரீட்சைகள் ஒன்லைனில்

கொழும்பு,ஒக்.19

பல்கலைக்கழக பரீட்சைகளை ஒன்லைன் மூலம் நடத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றால், பல்கலைக்கழக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மற்றும் பரீட்சைகள் பாதிப்பின்றி முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பல்கலைக்கழகங்களுக்கு அறிவுறுத்தல் விடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை சுகாதாரப் பாதுகாப்பு தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் 1988 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (க-இ)

# பெண்கள் உள்ளிட்ட மூவர் கைது

கொழும்பு,ஒக்.19

கொள்ளுப்பிட்டிய பகுதியில் சட்ட விரோதமாக மதுபானம் தயாரித்த நிலையம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

அங்கிருந்து மதுபானம் மற்றும் சிகரெட்டுக்கள் மீட்கப்பட்டன. வெளிநாட்டு பிரஜையொருவர் மற்றும் இரண்டு பெண்கள் கைதுசெய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (க-இ)

# 11 பள்ளிவாசல்கள் தற்காலிகமாக பூட்டு

கொழும்பு, ஒக்.19

இலங்கையில் கொரோனாப் பரவலைத் தடுப்பதற்காக, நீர்கொழும்பு பிரதேசத்திலுள்ள 11 பள்ளிவாசல்களைத் தற்காலிகமாக மூடுவதற்கு நிர்வாகத்தினர் தீர்மானித்துள்ளனர்.

இதற்கமைய, நீர்கொழும்பு பெரியமுல்லை பெரிய பள்ளிவாசல் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பத்து பள்ளிவாசல்கள் மற்றும் நீர்கொழும்பு நகர மத்தியில் சாந்த பீற்றர் கல்லூரிக்கு முன்பாகவுள்ள பள்ளிவாசல் அடங்கலாக 11 பள்ளிவாசல்களை கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தற்காலிகமாக மூடுவதற்கு பள்ளிவாசல் நிர்வாகத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதனால் பொதுமக்கள் ஐந்து வேளை தொழுகைக்கு பள்ளிவாசல் வருவதற்குத் தடைவிதிக் கப்பட்டுள்ளது. (ற-இ)

# புதையல் அகழ்ந்த மூவர் கைது!

பதுளை, ஒக்.19

பதுளையில் புதையல் அகழ்ந்த குற்றச்சாட்டில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் உட்பட மூவர், பண்டாரவளை பொலிஸாரினால் இன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்லைப் பகுதியில் அமைந்துள்ள சொரகுன ரஜமகா விகாரைப் பகுதியிலேயே இந்தப் புதையல் அகழப்பட்டது.

பதுளை மாவட்ட பொலிஸ் நிலையம் ஒன்றின் பொலிஸ் சார்ஜன்ட்டாக கடமையாற்றி வந்த ஒருவர், ஏனைய இரு இளைஞர்களையும் கூட்டிச் சென்று, அந்தப் பகுதியில் புதையல் அகழ்ந்துகொண்டிருந்தார்.

இது குறித்து, சொரகுன ரஜமகா விகாரைப் பொறுப்பாளரான சங்கைக்குரிய பன்சானந்த தேரர், பண்டாரவளை பொலிஸாருக்குத் தெரிவித்ததையடுத்து, அங்கு விரைந்த பொலிஸார், புதையல் அகழ்ந்த மூவரையும் கைது செய்தனர்.

இந்த மூவரையும் விசாரணையின் பின்னர், பண்டாரவளை மஜிஸ்ரேட் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதேச பொலிஸ் அதிபர் அத்துல த சில்வா தெரிவித்தார்.(ற-இ)

### யாழ். பல்கலையின் கிளி.வளாகத்தில் அமைக்கப்பட்ட

# விவசாய ஆய்வுகள், பயிற்சிக்கான ஆய்வு மையம் 31ஆம் திகதி திறப்பு



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தில், ஜெய்க்கா செயற்றிட்டத்தின் கீழ் கல்வி அமைச்சினால் 2 ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட விவசாய ஆய்வுகள் மற்றும் பயிற்சிக்கான ஆய்வுமையக் கட்டடத் தொகுதி எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை திறப்பு வழா காண இருக்கிறது. கடந்த வருடம் இதன் கட்டட மற்றும் அமைப்பு வேலைகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டிருந்த போதிலும், திறப்பு விழா ஒழுங்கமைப்பில் காணப்பட்ட இழுபறி நிலையினால் மிக நீண்ட காலமாக இவ் ஆய்வுமையம் பாவனைக்கு விடப்படாமல் இருந்து வந்தது.

2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்ட செயல் திட்டத்தின் கீழ் 1.6 பில்லியன் ஜப்பானிய ஜென் ( இலங்கை ரூபாயில் 2.2 பில்லியன்) பெறுமதிக்கு கட்டடங்கள் மற்றும் ஆய்வு கூட உபகரணங்கள் மற்றும் நவீன விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. கட்டுமானப் பணிகள் கடந்த வருடம் நிறைவு பெற்ற பின்னரும், பாவனைக்கு விடாதமை குறித்து கவலையடைந்த ஜப்பானிய அரசாங்கம், அதனை விரைவில் திறந்து பாவனைக்கு விடுமாறு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அழுத்தம் கொடுத்ததையடுத்து, இந்தக் கட்டடத் தொகுதியை எதிர்வரும் 31 ஆம் திகதி திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கட்டடத் தொகுதித் திறப்பு விழாவுக்கு கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், இலங்கைக்கான ஜப்பானிய உயர்ஸ்தனிகர் அகிரா சுகியமா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா, கடற்றொழில், நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ,5)

## தாதியுடன் தொடர்பிலிருந்த 100 பேருக்கு தொற்றில்லை

கொழும்பு,ஒக்.19

கஹதுட்டுவ ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான தாதியுடன் பழகிய 100 பணியாளர்களுக்கு, கொரோனாத் தொற்று ஏற்படவில்லை என்று கஹதுட்டுவ சுகாதார சேவை அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன் பணியாளர்கள் எவருக்கும் கொரோனாத் தொற்றுக்குரிய எவ்வித அறிகுறியும் காணப்படவில்லை என்றும் மருத்துவ அறிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இந்தத் தொழிற்சாலையில் பணியாற்றிய தாதியொருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, தனியார் மருத்துவமனையொன்றில் நடமாடும் சேவை மூலம் , 360 பணியாளர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. கொரோனா இரண்டாவது அலை ஆரம்பமானதையடுத்து, தொழிற்சாலையின் பணியாளர்கள் அனைவரும் முகக்கவசங்களை அணிந்து சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றியதால், தாதியிடமிருந்து ஏனையோருக்குத் தொற்றுப் பரவியிருக்க வாய்ப்பில்லை என்றும் தொழிற்சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (க-இ)



## அனுமதியின்றி கொண்டு சென்ற மரக்குற்றிகள் பறிமுதல்

கிளிநொச்சி,ஒக்.19

அனுமதிப்பத்திரம் இன்றி ஏற்றிச் செல்லப்பட்ட 35 மரக்குற்றிகள், பளைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தர்மகேணியில் அனுமதிப்பத்திரம் இன்றி வேம்பு மற்றும் நாவல் மரங்கள் தறிக்கப்பட்டு, உழவியந்திரத்தில் ஏற்றிச் செல்லப்படுகின்றன என்று பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. அங்கு விரைந்த பொலிஸார் மரக்குற்றிகளுடன் உழவியந்திரத்தையும் கைப்பற்றினர். மரக்குற்றிகளை ஏற்றியவர்கள் வாகனத்தைக் கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். வாகனம் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-6)

## மனிதனின் தோலில்
# ஒன்பது மணித்தியாலங்கள் உயிர்வாழும் கொரோனா

கொழும்பு,ஒக்.19

புதிய கொரோனா வைரஸ் மனிதத் தோலின் மேற்பரப்பில், சுமார் ஒன்பது மணித்தியாலம் உயிர்வாழ முடியும். இது இன்ஃப்ளூயன்ஸா ஏ வைரஸ் மனிதனின் மேற்பரப்பில் தங்கியிருக்கும் காலத்தை விட, ஐந்து மடங்கு காலம் அதிகம் என்று ஜப்பானில் ஆராய்ச்சியாளர்கள் குழு கண்டறிந்துள்ளது.

கியோட்டோ ப்ரிபெக்சுரல் மருத்துவ பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளரான தொற்றுநோயியல் நிபுணர் ரியோஹெய் ஹிரோஸ் உள்ளிட்ட ஆராய்ச்சியாளர்கள் இதனைக் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த நிலையில் புதிய கொரோனா வைரஸ் மதுசாரம் அடிப்படையிலான கிருமிநாசினி அல்லது அதே செறிவின் எதனோல் திரவத்தால், 15 விநாடிகளுக்குள் செயலிழக்கப்படுவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.



இதனையடுத்து மக்கள் தங்கள் கைகளை மதுசாரம் கலந்த தொற்று நீக்கிகளைப் பயன்டுத்தி நன்கு கழுவ வேண்டும் அல்லது மதுசாரம் சார்ந்த கிருமிநாசினியைப் பயன்படுத்த வேண்டும் என்று ஆராய்ச்சியாளர் ஹிரோஸ் தெரிவித்துள்ளார்.

குழுவின் இந்தக்கண்டுபிடிப்புகள் அமரிக்காவின் அறிவியல் இதழான 'மருத்துவத் தொற்று நோய்கள்' என்ற இணையப்பதிப்பில் வெளியிடப்பட்டுள்ளன.

குழுவின் கூற்றுப்படி, புதிய கொரோனா வைரஸ் மற்றும் இன்ஃப்ளூவன்ஸா ஏ ஆகியவை தோலின் மேற்பரப்பில் பயன்படுத்தப்பட்டபோது, புதிய கொரோனா வைரஸ் மனித தோல் பரப்பின் மீது சுமார் ஒன்பது மணித்தியாலங்கள் நீடித்தது. அதே நேரத்தில் இன்புளுவன்சா ஏயின் உயிர்வாழ்தல் சுமார் 1.8 மணித்தியாலம் இருந்தது. இதேவேளை வெப்பத்தைத் தாங்கும் கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் போன்ற உயிர் வாழ்வதற்கு உகந்த மேற்பரப்புகளுக்கு இந்த குழு வைரஸ்களைப் பயன்படுத்தியது.

இதன்போது புதிய கொரோனா வைரஸ் சுமார் 58 முதல் 85 மணி வரை அவை செயலில் இருப்பது கண்டறியப்பட்டது, அதே நேரத்தில் இன்ஃப்ளூவன்ஸா ஆறு முதல் 11 மணித்தியாலம் வரை மாத்திரமே அவற்றில் உயிர்வாழ்ந்தமை கண்டறியப்பட்டுள்ளது.

ஆராய்ச்சியின் போது புதிய கொரோனா வைரஸ், எல்லா நிகழ்வுகளிலும் மிக நீண்ட காலம் தப்பிப்பிழைத்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(கஇ)

## பொலிஸ் உத்தியோகத்தரின் குடும்பத்தினருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.19

கொழும்பு ஆம்பர் வீதியிலுள்ள பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தி யோகத்தரின் குடும்ப உறுப்பினர்கள் இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என ஊடக பேச்சாளர் டி.ஐ.ஜி அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் கடமையில் இருந்தார்.

எனவே, அவருடன் நெருங்கிப் பணிபுரிந்த ஏனைய 16 பொலிஸ் உத்தியோகத்தர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# பிள்ளையான் மீதான வழக்கு ஒத்திவைப்பு

*கொரோனா அச்சத்தால் சட்டத்தரணிகள் வரவில்லை*

கொழும்பு,ஒக்.19

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) மீதான வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக, சட்டமா அதிபர் திணைக்களச் சட்டத்தரணிகள் சமூகம் அளிக்காத காரணத்தால் எதிர்வரும் நவம்பர் மாதம் விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளையான் மீதான வழக்கு விசாரணை இன்று இடம்பெற்றது.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இன்று நீதிமன்றுக்கு பிள்ளையான் உட்பட ஆறு பேரும் அழைத்துவரப்பட்டனர். வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி டி.சூசைதாசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிர்வரும் 'நவம்பர் 2 ஆம் , 10 ஆம் மற்றும் 16 ஆம் திகதி வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 25ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்த ராஜா, கஜன் மாமா எனப்படும் கனகநாயகம் மற்றும் இராணுவப்புலனாய்வு உத்தியோகஸ்தர் எம்.கலீல், முன்னாள் இராணுவச் சிப்பாயான மதுசிங்க (வினோத்) ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கடந்த 2015ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (க-இ)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியில், நவராத்திரிப் பூசை கும்பவைப்பு வழிபாடுகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றன. (க-159)

# சுகாதாரப் பாதுகாப்பில்லையெனில் 1988 இலக்கத்துக்கு அழைக்கவும்

கொழும்பு,ஒக்.19

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் சுகாதார நலனை உறுதிப்படுத்தாத வகையில் செயற்படுதல் அல்லது தேவையான சுகாதார வசதிகள் கிடைக்காவிடின், உடனடியாக கல்வி அமைச்சின் துரித தொலைபேசி இலக்கமான 1988 என்ற இலக்கத்துக்கு அழைக்குமாறு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா பரவலால் நாட்டில் ஏற்பட்டுள்ள ஆபத்து நிலைமையைக் கவனத்தில் கொண்டு, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துப் பிரிவுகளிடமிருந்து பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளலாம். பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பாதுகாப்புடன் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (க-இ)

20 ஆவது திருத்தச் சட்டம்:

# பந்துலவின் கருத்தால் கூட்டம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக்.19

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டவரைபு தொடர்பாக நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்கும் கட்சித் தலைவர்களுக்கும் இடையில் முக்கிய கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. இதில் அமைச்சர் பந்துல குணவர்தன, தெரிவித்த கருத்தையடுத்து கூட்டத்தில் பதற்றம் ஏற்பட்டதுடன், அந்தக் கலந்துரையாடல் இடைநடுவில் கைவிடப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலுக்கு, அமைச்சர் பந்துல குணவர்தன தாமதமாக வருகைதந்தார். இடை நடுவில் வந்தமைக்கான காரணத்தை, பந்துலவிடம் ஏனையோர் வினவினர், “பி.சி.ஆர் பரிசோதனையை செய்து கொண்டேன், ஆனால், இன்னும் அறிக்கை கிடைக்கவில்லை” எனத் தெரிவித்தார்.

இதனால், கலந்துரையாடலில் ஒருவகையான பதற்ற நிலைமை ஏற்பட்டது. இதையடுத்து, கலந்துரையாடல் ஒத்திவைக்கப்பட்டது. (ற-இ)

# மத்துகமவில் மூன்று பிரதேசங்கள் முடக்கம்

களுத்துறை, ஒக்.19

மத்துகம பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஓவிட்டிகல, பதுகம, நவஜனபதிய ஆகிய இடங்கள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் இந்த அறிவிப்பை நேற்று மாலை விடுத்துள்ளது. அண்மையில் மத்துகமகொழும்பு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த பேருந்து ஒன்றின் சாரதிக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டது. இந்நிலையில், அவருடன் அநுராதபுரத்துக்கு யாத்திரை மேற்கொண்ட 17 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டிருந்தது. இதையடுத்து, மத்துகம பிரதேசத்தில் மாத்திரம் இதுவரை 29 பேருக்கு கொரோனாத் தொற்று கண்டறியப்பட்டுள்ளமை களுத்துறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் தகவல்களின்படி தெரியவந்துள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் கண்டறியப்பட்ட பிரதேசங்களில் மேலும் வைரஸ் தொற்று பரவாமல் இருக்க இவ்வாறு அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# தனிமைப்படுத்தல் ஊரடங்கு கம்பஹாவில் நீடிப்பு

கம்பஹா, ஒக்.19

கம்பஹா மாவட்டத்தில் 19 பொலிஸ் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு மீள் அறிவித்தல் வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வர்த்தக நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கப்படாது என்றும் கொரோனா பரவலைத் தடுக்க பொதுமக்கள் வீட்டிலேயே இருக்குமாறும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர். இதே வேளை ஊரடங்கு உத்தரவு விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 37 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், ஐந்து வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதனையடுத்து, ஒக்ரோபர் 04 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 302 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், 53 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதேவேளை, களுத்துறை மாவட்ட ஓவிடிகல கிராமசேவகர் பிரிவு, பதுகம கிராம சேவகர் பிரிவு, பதுகம புதிய கொலணி கிராமசேவகர் பிரிவு ஆகிய மூன்று பிரிவுகளுக்கு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு நேற்றைய தினம் பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## கப்பல்துறை ஊழியர்கள் ஐவருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.19

கொழும்பு கடற்படையின் கப்பல் துறை ஊழியர்கள் ஐவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பு மத்துகம பேருந்தில் பயணித்த கொழும்பு கடற்படை கப்பல் துறை ஊழியர் ஒருவருக்குத் தொற்று உறுதியானது. இதையடுத்து ஏனைய ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் மேலும் 4 ஊழியர்கள் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். அந்தப் பேருந்தில் பயணித்த கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பணிப்புரியும் தாதி ஒருவருக்கும், பேருந்து ஒட்டுநருக்கும் உதவியாளருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இருப்பது இதற்கு முன்னர் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# பரீட்சை மோசடிகள் சி.ஐ.டி விசாரணை

கொழும்பு, ஒக்.19

நடைபெற்று வரும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மோசடியில் ஈடுபட்ட மாணவர்கள் தொடர்பில் விசாரணை இடம்பெறுகின்றன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பீ.சனத் பூஜித் தெரிவித்துள்ளார். குற்றப்புலனாய்வுத் திணைக்களம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. மோசடிகளைத் தவிர்க்க அனைத்துப் பரீட்சை நிலையங்களுக்கும் மேலதிக உதவி மண்டப தலைமை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (வ-இ)

# ஆடை ஏற்றுமதி வருமானம் சரிவு

கொழும்பு, ஒக்.19

2020 ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், இலங்கையின் ஆடை ஏற்றுமதி வருமானம் 22 வீதம் குறைந்து 3.1 பில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது. கடந்த ஐந்து வருடங்களில் ஜனவரி முதல் செப்ரெம்பர் வரையிலான காலப்பகுதியில் பதிவாகிய மிகக் குறைந்த ஏற்றுமதி வருமானம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, ஆடை ஏற்றுமதியில் 3.9 அமெரிக்க டொலர் என்ற அதிகூடிய வருமானம் கடந்த 2019ஆம் ஆண்டு பதிவாகியிருந்தது. இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கான ஆடை ஏற்றுமதியில் 22.15 வீதம் மற்றும் 1.4 பில்லியன் டொலரும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதியில் 21.36 வீதம் மற்றும் 1.3 பில்லியன் அமெரிக்க டொலரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த வீழ்ச்சிக்கு உலக நாடுகளில் பரவியுள்ள கொரோனாப் பெருந்தொற்றே பிரதாக காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

நீர்கொழும்பில்

# வர்த்தருக்கும் மனைவிக்கும் கொரோனாத் தொற்று உறுதி

நீர்கொழும்பு, ஒக்.19

நீர்கொழும்பு நகர மத்தியில் அமைந்துள்ள ஆடை விற்பனை நிலையத்தின் வர்த்தகருக்கும் அவரது மனைவிக்கும் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. இதையடுத்து மாநகர சபையின் பொது சுகாதார பிரிவினர் மாநகர சபை அங்காடி கடைத் தொகுதியில் அமைந்துள்ள சகல கடைகளை



யும் தற்காலிகமாக மூடுவதற்கு நேற்று நடவடிக்கை எடுத்தனர். அங்கு அமைந்துள்ள 200க்கும் மேற்பட்ட கடைகள் தற்போது மூடப்பட்டு மக்கள் நடமாட்டத்துக்கு தடை விதிக்கப்பட் டுள்ளன. நீர்கொழும்பு அக்கரபனஹ பிரதேசத்தைச் சேர்ந்த கணவன், மனைவி ஆகியோரே கொரோனாத் தொற்றுக்கு உள்ளானமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்கள் திவுலபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# ஜசிந்தா ஆர்டெனுக்கு மீண்டும் கிரீடம்

வெலிங்டன், ஒக்.19



நியூஸிலாந்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் பிரதமர் ஜசிந்தா ஆர்டெனின் தொழிலாளர் கட்சி சிறப் பான வெற்றியைப் பெற்றுள் ளது.

கொரோனாத் தொற்றுப் பரவலை மிகச்சிறப்பாக கையாண்டு கட்டுப்படுத்தி னார் ஜசிந்தா ஆர்டெனின். இதற்காக இந்த ஆதரவினை மக்கள் அவருக்கு வழங்கியுள் ளனர் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

பிரதமர் ஜசிந்த ஆர்டெர்ன் தலைமையிலான தொழிற் கட்சி பாராளுமன்றின் 120 இடங்களில் 64 இடங் களைப் பெற்றுள்ளது.

தொழிற் கட்சியானது 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட ஆசனங்களை வென்றுள்ள மையால் ஆர்டெர்னால் தற்போதைய அமைப்பின் கீழ் ஒற்றை கட்சி அரசாங் கத்தை உருவாக்க முடி யும்.

1996 ஆம் ஆண்டில் நியூசி லாந்து விகிதாசார வாக்க ளிப்பு முறையை ஏற்றுக் கொண்டதிலிருந்து எந்த வொரு கட்சியினரும் பெறாத மிக உயர்ந்த பெரும் பான்மையாக இந்த முடிவு அமைந்துள்ளது.

இந் நிலையில் ஜசிந்த ஆர் டெர்னை எதிர்த்து போட்டி யிட்ட எதிர்க் கட்சியான தேசியக் கட்சித்தலைவர் ஜூடித் கொலின்ஸ், ஜசிந்தா வுக்கு தொலைபேசி மூலம் வாழ்த்துக்களைத் தெரிவித் துள்ளார். (வ-இ)



## தற்கொலைத் தாக்குதல் 12 பேர் சாவு; 102 பேர் காயம்

ஆப்கானிஸ்தானின் கோரில் மாகாணத்தில் அமைந்துள்ள பொலிஸ் தலைமையகத்துக்கு அருகே இடம்பெற்ற தற்கொலை கார்க் குண்டுத் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதில் 102 பேர் காயமடைந்துள்ளனர் என ஆப்கா னிஸ்தானின் உள்துறை அமைச்சகம் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த பலரின் நிலைமைகள் கவலைக்கிட மாக உள்ளமையினால் உயிரிழப்புகள் மேலும் அதி கரிக்கக் கூடும் என்றும் அஞ்சப்படுகிறது. (வ-இ)

## ஜிஹாதிகளின் தாக்குதலில் 20 பேர் உயிரிழப்பு

உவாகடுகு, ஒக்.19

வடக்கு புர்கினா பாசோவில் மூன்று கிராமங் கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களில் 20 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை ஜிஹாதிக்களால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என ஆளுந ரின் பேச்சாளர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. சந்தைகள் மற்றும் கிராமங்களிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

உலகின் மிக வறிய நாடுகளில் ஒன்றாக உள்ள புர்கினா பாசோ கடந்த 2015இல் அண்டை நாடான மாலியில் இருந்து வந்த ஜிஹாதிக்க ளின் அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்து வருகி றது. இந்த ஆண்டில் இடம்பெற்ற தாக்குதல் களில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டு பலரும் இடம்பெயர்ந்துள்ளனர். (வ-இ)

## முகக்கவசத்தை கழற்றாமலே உணவை உண்ணலாம்

கொல்கத்தாவில் உள்ள ஒரு உணவகம் தனது வாடிக்கையாளர்களுக்கு ஜிப் அம்சத்துடன் கூடிய தனித்துவமான முகக்கவசங்களை வழங்குவதற்கான ஒரு புதுமையான நடவடிக்கையை எடுத்துள்ளது. பெரும்பாலும் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறும்போது முகக்கவசத்தை அணிய மறந்து விடு கிறார்கள்.

இதனால் பல இடங்களில் அவர்களை அனுமதிப்பதில்லை. இப்படிப்பட்ட நிலையில் கொல்கத்தா வில் உள்ள ஒரு உணவகம் ஜிப் வைத்த முகக்கவசங்களை வழங்குகிறது. இதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு பொது இடங்களில் முகக்கவசம் அணிவது ஒரு தினசரி பழக்கமாக வேண்டும் என்பதே இந்த உணவகத்தின் குறிக்கோள் முகக்கவசம் கட்டாய மாக்கப் பட்டுள்ளதால், அவை ஒரு ஜிப் அம்சத்துடன் வந்தால், அவற்றை அகற்ற வேண்டிய அவசியமே ஏற்படாது என உணவக உரிமையாளர் சோமோஷ்ரீ சென்குப்தா கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது:

“முகக்கவசங்கள் கட்டாயமாக்கப்பட் டுள்ளன. ஆகையால் நீங்கள் இங்கே உணவை உண்ணும்போது, ஜிப் அவுட் செய்து சாப்பிடுங்கள், நீங்கள் சாப்பிட்டு முடித்ததும், ஜிப் இன் செய்யுங்கள். இந்த தனிச்சிறப்பு வாய்ந்த முகக்கவசங்களை சாப்பிடும்போது கழற்றாமல் போட்டுக்கொண்டே இருக்கலாம்.

நாங்கள் கூடுதல் கட்டணம் இல்லாமல் வாடிக்கையாளர்க ளுக்கு இந்த மாஸ்குகளை வழங்குகிறோம். இருப்பினும், இது கட்டாயமில்லை. அவர்கள் விரும்பினால் அதை அணியலாம் என கூறினார்.



## ஈரான் அரசியல் கட்சியான கே.டி.பி அலுவலகத்துக்குத் தீ



ஈராக்கில் குர்திஸ்தான் ஜனநாயகக் கட்சியின் தலைமையகத்துக்கு ஹஷ்த் அல்ஷாபி போராளிக ளின் ஆதரவாளர்கள் தீ வைத்துள்ளனர் என பாது காப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மத்திய பாக்தாத்தின் கரடா மாவட்டத்தில் அமைந் துள்ள குர்திஸ்தான் ஜனநாயகக் கட்சி வளாகத்தி லேயே இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கட்டடத்துக்குள் நுழையா மல் தடுக்க பாதுகாப்பு படையினர் தவறி விட்டனர் என பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர். கே.டி.பி என்பது வடக்கு ஈராக்கின் குர்திஷ் பிராந்தி யத்தில் ஆளும் கட்சிகளில் ஒன்று என்பது குறிப்பி டத்தக் கது. (வ-இ)

## அமெரிக்காவில் 67 ஆண்டுகளின் பின் பெண்ணொருவருக்கு மரண தண்டனை!



அமெரிக்காவில் 67 ஆண்டுகளுக்குப் பின்னர் லிசா மோன்ட்கோமேரி (Lisa Montgomery) என்ற பெண்ணொருவ ருக்கு மரண தண் டனை நிறை வேற்றப் படவுள்ளது.

மிசோரி மாகாணத்தைச் சேர்ந்த குறித்த பெண், 8 மாத கர்ப்பிணியாக இருந்த ஸ்டின்னெட் (Stinnett) என்பவரின் கழுத்தை நெரித்து கொன்று, கத்தியால் அவரது வயிற்றைக் கிழித்து கருப்பையி லிருந்த குழந்தையை எடுத்துள்ளார்.

இதற்காக லிசாவிற்கு கடந்த 2007ஆம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப் பட்டது. எனினும் இதை எதிர்த்து அவர் தாக்கல் செய்த மேன் முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டதை தொடர்ந்து, டிசம்பர் மாதம் 8ஆம் திகதி விஷ ஊசி மூலம் லிசாவிற்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட வுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## சம்பியனானது உதயசூரியன்

கரணவாய், ஒக்.19

அல்வாய் விளையாட்டு விழாவில், 21 வயதுப் பிரிவி னருக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத் தில், உதயசூரியன் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திய அல்வாய் விளையாட்டு விழாவில் 21 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் அல்வாய் யூத் அணியை எதிர்த்து, குரும்பசட்டி உதயசூரியன் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தா டிய உதயசூரியன் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 80 ஓட்டங் களைப் பெற்றது. அந்த அணி சார்பில் அதிகபட்ச மாக புருஷோத் 27 ஓட்டங்களையும், நிதுஷன் 17 ஓட்டங்களையும், திசான் 15 ஓட்டங்களையும் பெற் றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் அல்வாய் யூத் அணி சார்பில் நிசான், பவித்திரன் ஆகியோர் தலா ஒவ் வொரு இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யூத் அணி இறுதிவரை போராடி 7 இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்று ஒரு ஓட்டத்தால் தோல்வியடைந்தது.

அந்த அணி சார்பில் கிரிதரன் 35 ஓட்டங்களையும், நிகாஷன் 17 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் புருஷோத் 3 இலக்குகளையும், திசான், செந்தூரன், லிதுஷன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

ஆட்ட நாயகனாக உதயசூரியன் அணி வீரர் புரு ஷோத் தெரிவுசெய்யப்பட்டார். (ற-422)

## வட்டக்கண்டல் சுடரொளி கழக இளைஞர்களுக்கு பாதணிகள்

மன்னார், ஒக்.19

மன்னார் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட வட்டக்கண்டல் சுடரொளி விளையாட்டுக் கழக இளை ஞர்களுக்கு ஒரு தொகுதி கால்பந்தாட்ட பாதணிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டன.

வட்டக்கண்டல் சுடரொளி விளையாட்டுக் கழக இளை ஞர்களுக்கு முன்னாள் சுடரொளி விளையாட்டுக் கழக வீரரும், வடக்கு மாகாண கட்டட நிர்மாண சங்கத்தின் பணிப்பாளர்க ளில் ஒருவருமான டக்சன் ஒரு தொகை கால்பந்தாட்ட பாதணிகளை வழங்கினார்.

மன்னார் மாவட்டத்திலுள்ள கால்பந்தாட்ட வீரர்களின் விளையாட்டுத் திறனை ஊக்கப்படுத்தும் வகையில், பல்வேறு உதவித் திட்டங்களை தொடர்ந்தும் அவர் முன்னெ டுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-56)

## மகுடம் சூடியது யூத் அணி

கரணவாய், ஒக்.19

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திய அல்வாய் விளையாட்டு விழா வில், திறந்த வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியில் அல்வாய் யூத் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.


இதன் இறுதியாட்டம் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெற்றது. இறுதியாட்டத்தில் அல்வாய் யூத் அணியை எதிர்த்து வதிரி டைமன்ஸ் அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய அல்வாய் யூத் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்துப் பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 79 ஓட்டங்களைப் பெற்றது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக பிரகாஷ் 37 ஓட்டங்களையும், திருபரன் 8 ஓட்டங்களை யும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் வதிரி டைமன்ஸ் அணி சார்பில் அமுதன் 3 இலக்குகளையும், பிரதீப், பிறேம்குமார் ஆகியோர் தலா இரு இலக்குகளையும், ராம்ஜித் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்கள்.



பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வதிரி டைமன்ஸ் அணி 9.1 பந்துப் பரிமாற்றங்க ளில் சகல இலக்குகளையும் இழந்து 60 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இதனால் 19 ஓட்டங்களால் அல்வாய் யூத் அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

வதிரி டைமன்ஸ் அணி சார்பில் அதிகபட்ச மாக துவாரகன் 18 ஓட்டங்களையும், ராம் ஜித் 10 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத் தனர். பந்து வீச்சில் அல்வாய் யூத் அணி சார்பில் பிரசாத், நிகாஷ், கிரி ஆகியோர் தலா இரு இலக்குகளையும், சாதுஷன் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். இதில் ஆட்ட நாயகனாக அல்வாய் யூத் அணி வீரர் பிர காஷ் தெரிவு செய்யப் பட்டார். (ற-422)



## வாழ்வா, சாவா போராட்டத்தில் சென்னை அணி

ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதுகின்றன.

இவ்விரு அணிகளும் தலா 9 ஆட்டங்களில் விளை யாடி 3 வெற்றி, 6 தோல்வி என்று 6 புள்ளியுடன் ஒரே நிலைமையில் உள்ளன. எஞ்சிய 5 ஆட்டங்க ளிலும் வெற்றி பெற்றால் தான் அடுத்த சுற்று (பிளேஒவ்) வாய்ப்பை நினைத்து பார்க்க முடியும். அந்த வகையில் இரு அணிகளுக்குமே இது வாழ் வாசாவா போர் தான்.

பங்கேற்ற எல்லா ஐ.பி.எல். தொடர்களிலும் ‘பிளேஒவ்’ சுற்றுக்குள் நுழைந்த ஒரே அணியான சென்னை சூப்பர் கிங்ஸ் இந்த முறை அந்த பெரு மையை இழந்து விடுமோ? என்று நினைக்கத் தோன்றுகிறது. சென்னை அணியில் ரொப்3 வீரர் கள் பிளிஸ்சிஸ், வொட்சன், அம்பத்தி ராயுடு நன்றாக ஆடுகிறார்கள். ஆனால் மிடில் வரிசை தான் சொதப்பலாக இருக்கிறது.

குறிப்பாக கப்டன் டோனியின் மோசமான பேட் டிங்கே (9 ஆட்டத்தில் 136 ரன்) பின்னடைவுக்கு காரணமாக அமைகிறது என பலராலும் தெரிவிக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே ராஜஸ்தா னுக்கு எதிராக 216 ரன்கள் இலக்கை நோக்கி விளையாடி போது 200 ரன்கள் எடுத்து நெருங்கி வந்து சென்னை அணி தோற்றது. இந்த தோல்விக்கு பழிதீர்த்து மறுபடியும் வெற்றிப்பாதைக்குத் திரும் புமா? என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும்.

முந்தைய ஆட்டத்தில் பெங்களூர் அணியிடம் போராடி பணிந்த ராஜஸ்தான் அணியும் நெருக்கடி யில் சிக்கியுள்ளது. பேட்டிங், பந்து வீச்சில் தரமான வீரர்கள் இருந்தும் தொடர்ந்து சீரான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாமல் தள்ளாடுகிறது. முதல் 2 ஆட்டங்களில் ரன்மழை பொழிந்த சஞ்சு சாம்சன் அடுத்த 7 ஆட்டங்களில் பேட்டிங்கை மறந்து விட்டது போலவே ஆடியுள்ளார்.

அதிரடி வீரர்கள் பென் ஸ்டோக்ஸ், ஜோஸ் பட்லரி டம் இருந்து இன்னும் முழுமையான திறமை வெளிப்படவில்லை. தங்கள் அணியை தூக்கி நிறுத்த வேண்டும் என்றால் இவர்கள் ரன்வேட்டை நடத்த வேண்டியது அவசியமாகும். இரு அணிக ளுமே வெற்றி பெற்றாக வேண்டிய நிர்ப்பந்தத்துடன் வரிந்து கட்டுவதால் ஆட்டத்தில் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது.



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 19.10.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.